**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

DEPOSITION OF WITNESS

**CC.No.270/2023**

PW-2

| | | | |
|---|---|---|---|
| Name | வேலு (PW2) | | |
| Father's Name | ரங்கசாமி | Calling | |
| Village | சிகளஅள்ளி | | |
| Taluk | காரியமங்களம் | Age | |
| District | தருமபுரி மாவட்டம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **10th day of February 2026** by M.Thangamani, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused absent, petition filed and allowed)*

**முதல் விசாரணை:–**

நான் மேற்படி முகவரியில் வசித்து மெக்கானிக் தொழில் செய்து வருகிறேன். காயம்பட்டு இறந்து போன பீமன் என் சொந்த தம்பி ஆவார். கடந்த 06.06.2023ம் தேதி சேலம்- கோவை பை பாஸ் ரோட்டில் Tanker லாரி ஓட்டிச் செல்லும்போது அவிநாசியை தாண்டி அவர் 3 வது Track ல் செல்லும் போது 2 வது Track ல் சென்று கொண்டிருந்த 10 வீல் கொண்ட டாரஸ் லாரி திடீரென எவ்வித சைகையும் இல்லாமல் 3 வது Track க்கில் வந்து விபத்து ஏற்பட்டதில் Stering வயிற்றில் பட்டு, மொக்கை காயம் ஏற்பட்டு திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு சென்று கொண்டிருப்பதாக சொன்னார்கள். பின்பு பீமன் 08.06.2023ம் தேதி இறந்துவிட்டார். அவரை நாங்கள் திருப்பூர் அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் வந்து பார்த்து பீமன் பிரேதத்தை அடையாளம் காட்டினோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை எதிரி தரப்பில் : இல்லை**

விபத்து சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. விபத்தில் இறந்தவர் என்னுடைய தம்பி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd-)N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |